

بسم الله الرحمن الرحيم

# Friday Sermon

**07 DECEMBER 2018**

**(28 RABI'UL AWWAL 1440 AH)**

**IN MATHRA, KERALA - INDIA**


**HAZRAT MUNIR AHMAD AZIM (A)**

**Nabiullah, Rassullullah, Khalifathullah, Waliullah**

**Al-Messih, Al-Mahdi, Mujaddid & Mohyiuddin**


# UNITY OF MUSLIMS / முஸ்லீம்களின் ஒற்றுமை

## TAMIL VERSION / தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹீதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**நீங்கள் யாவரும் ஒன்று பட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்து போய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) எதிரிகளாய் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனுடைய அருளினால், உடன் பிறப்பு போல் ஆகிவிட்டீர்கள். நீங்கள் ஒரு நெருப்புக்கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறே**

**அல்லாஹ் உங்களுக்கு தன் வசனங்களை, நீங்கள் நேர் வழியினைப் பெறும் பொருட்டு விளக்குகின்றான் (3:104).**

அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடைகளால் ஜமா அத்து அஹ்மதியா அல்-முஸ்லீமினை அதை தொடர்ந்து ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை நிறுவியதிலிருந்து, அதைப்போன்று 2001-லிருந்து நான் பெற்று வந்த வெளிபாடுகளிலிருந்து, அல்லாஹ் தனது வல்லமையினை வெளிபடுத்தி வருகின்றான் என்பதை நமக்கு உணர்ந்துக் கொள்ளலாம். அல்லாஹ் தனது வாக்குறுதியின் வல்லமையினை வெளிபடுத்துவதன் மூலம் அநேக இதயங்கள் நேர்வழியினை பெற்று வருகின்றது. தனது அடையாளங்களின் உண்மை, தனது வல்லமை மற்றும் தனது கலீஃபத்துல்லாஹ் ஆகியவை அவனது அத்தாட்சிகளாகத் திகழ்கிறது. அல்லாஹ்வின் அருளால் இங்கு இந்தியாவில், கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஏராளமான மக்கள் நேர்வழியினை பெற்றுள்ளனர். கலீஃபத்துல்லாஹ்வின் உண்மையைப் பற்றியும், இந்நூற்றாண்டின் இறை அடையாளங்களைப் பற்றியும் அல்லாஹ்விடமிருந்து மிக தெளிவான அத்தாட்சிகள் உங்களில் பெரும்பான்மையானவர்களும் பெற்றுள்ளீர்கள் மாஷா அல்லாஹ்!

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் வருகையுடன் இந்தியாவிலும் உலகின் வேறு பகுதிகளிலும் அல்லாஹ் மிக உன்னதமான நிலையில் ஆத்மீக புரட்சியினை ஏற்படுத்தியுள்ளான். தனது அன்புமிக்க கலீஃபாவின் உண்மைக்கு சான்றாக அவன் மேன்மேலும் அடையாளங்களைக் காட்டுவான் என்பதையும், தனது வல்லமையினை வெளிப்படுத்துவான் என்பதையும் நீங்கள் இன்னும் காண்பீர்கள்.

திருக் குர் - ஆனில் அல்லாஹ் கூறுகின்றான் **நம்பிக்கையாளர்களே! உங்களுள் தமது மார்க்கத்திலிருந்து திரும்பி விடுகின்றவர், அல்லாஹ் விரைவிலே (அவர்களுக்கு பதிலாக) ஒரு சமுதாயத்தினரைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான், அவர்களும் அவனை நேசிப்பார்கள். நம்பிக்கை கொண்டவர்களிடம் பணிவு காட்ட கூடியவர்களாகவும், நிராகரிப்பவர்களிடம், கடினமானவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் பெரும்முயற்சி செய்வார்கள். குறை கூறுவோரின் பழிப்பிற்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருளாகும். இந்த அருளினை அவன் விரும்புபவருக்கு வழங்குகின்றான். மேலும் அல்லாஹ் வளமிக்கோனும் நன்கு அறிபவனுமாவான் (என்பதை நினைவில் கொள்ளட்டும்). (5:55)**

பல நிலையிலும் இந்த திருக் குர் - ஆன் வெளிப்பாடு நம்பிக்கையாளர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது. குறிப்பாக மௌரிஷியஸை சார்ந்த முதன்முதலான நம்பிக்கையாளர்களுக்கு இது மிக பெரிய

ஒரு எச்சரிக்கையாகும். ஆகவே எந்நேரமும் கவனமாக நீங்கள் இருக்க வேண்டும். நம் நம்பிக்கை மற்றும் இஸ்லாமை பாதுகாப்பதற்காக நாம் கடினமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் தேர்ந்தெடுத்த தனது கலீஃ.பத்துல்லாஹ் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டீர்கள். ஆகவே நீங்கள் அந்த பை-அத்தில் உறுதியுடன் இருங்கள். நீங்கள் கலீஃ.பத்துல்லாஹ்வின் கரங்களில் அல்ல, மாறாக அல்லாஹ்வின் கரங்களில்தான் பை-அத் செய்திருக்கின்றீர்கள். நிச்சயமாக இது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உடன்படிக்கையாகும். என்ன நிகழ்ந்தாலும் சரி நீங்கள் ஒரு உடலை போல் ஐக்கியத்துடன் இருக்க வேண்டும். பிரிந்து போய் விடாதீர்கள். அவ்வாறேயானால், நம்மால் எதையும் சாதிக்க இயலாது. ஆனால் நாம் ஐக்கியத்துடன் இருப்போமேயானால், அதாவது ஒற்றுமையுடன் இஸ்லாமிய கொள்கைக்கு ஏற்றவாறு நாம் முன்மாதிரியாக இருப்போமேயானால் நமக்கு வெற்றியினை நோக்கி முன்செல்ல முடியும். நிச்சயமாக அல்லாஹ்வின் அருட்கொடைகளும், அவனது மகத்தான அற்புதங்களும் நம்மை வெற்றியின்பால் அழைத்து செல்லும்.

இறை வெளிப்பாட்டின் வரலாற்றில் இந்நாள் ஒரு சிறப்புமிக்க நாள் என்பது நினைவில் வருகிறது. ஏனெனில் அல்லாஹ்வின் கட்டளைப் படி இந்நூற்றாண்டின் முஹைத்தீன் என அதிகார பூர்வமாக நான் பிரகடனப் படுத்தியது இதே தினத்திலாகும். சிலருக்கு மட்டுமே இக்காரியம் தெரியும். 2003 – ம் ஆண்டில் டிசம்பர் 06,07 ஆகிய தேதிகளில்தான் இந்நூற்றாண்டின் மஸீஹ் என்று பிரகடனப் படுத்தினேன். இப்போதும் அல்லாஹ்விடமிருந்து வெளிப்பாடு மற்றும் கட்டளைகளைப் பெற்று வருகிறேன் என்பது இந்நூற்றாண்டின் முதன்மையான நம்பிக்கையாளர்களுக்கு வலிமையை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அல்லாஹ் இந்நிலையில்த்தான் திட்டமிட்டான். 2010 – ஆம் ஆண்டில் அல்லாஹ்விடமிருந்து உத்தரவைப் பெறும் வரையிலும் இதை நான் எனது தனிப்பட்ட மற்றும் இரகசியமான காரியமாக வைத்திருந்தேன். 2010 – ம் ஆண்டு செப்டம்பர் 10 – ம் தேதி வெள்ளிக்கிழமையன்று அதாவது சிறிய பெருநாள் தினத்தில் இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என பிரகடனப்படுத்துவதற்கு அல்லாஹ் எனக்கு கட்டளையிட்டான். அதைப் போன்றே இதே தினத்தில்தான் ஹிஜ்ரா 15 - ம் இந்நூற்றாண்டின் முஜத்தீது என பிரகடனப்படுத்த அல்லாஹ் எனக்கு உத்தரவிட்டான். அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்! நிச்சயமாக அல்லாஹ்வின் வழி என்பது அசாதரணமான ஒன்றாகும்.

கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த எனது அன்பானவர்களே! இப்போது முன்னோர்களின் இடத்தை நீங்கள் பிடித்திருக்கின்றீர்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் வாயிலாக தோன்றிய

இந்நூற்றாண்டின் இறையருள் கொடையில் முதலாவது இடத்தை நீங்கள் கைப்பற்றி விட்டீர்கள். இந்நிலையில், உங்கள் நம்பிக்கையை பாதுகாக்கும் காரியத்தில் நீங்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இஸ்லாத்தின் கயிறு உங்கள் கரங்களிலிருந்து விலகி செல்லாமல் அதைபற்றி பிடித்துக் கொள்ளுங்கள்.

இந்நூற்றாண்டின் முஹைத்தீன், கலீ∴பத்துல்லாஹ் இறைத்தூதர் மற்றும் மஸீஹை ஏற்றுக்கொண்டிருப்பதால் அல்லாஹ்வின் பார்வையில் நீங்கள் இன்று கண்ணியமானவர்களாக இருக்கின்றீர்கள். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ்விடம் இந்த எளிய சேவகனுடைய பிரார்த்தனை இதுவாகும். அவர்களின் வாழ்க்கை பயணத்தில் அவர்கள் மகிழ்ச்சியை சந்திக்கும் நிலையிலும், துயரத்தை சந்திக்கும் நிலையிலும் அல்லாஹ்விடமும் அவனது கலீ∴பாவிடமும் செய்த உடன்படிக்கையை மறந்து விடாமலிருக்கட்டும். இந்த உடன்படிக்கையை எந்நேரமும் அவர்கள் நினைவில் கொண்டிருக்கட்டும். இஸ்லாமிற்காக, உண்மையான இஸ்லாமிற்காக அவர்கள் இந்நூற்றாண்டின் கலீ∴பத்துல்லாஹ்வின் கரத்திலும் அதை விட மேலாக அல்லாஹ்வின் கரத்திலும் செய்த உடன்படிக்கையை எப்போதும் நினைவில் கொண்டு வாழ்பவர்களாக இருக்கட்டும். இது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உடன்படிக்கையாக இருக்கிறது. நீங்கள் அல்லாஹ்வுக்கும் இந்நூற்றாண்டின் கலீ∴பத்துல்லாஹ்வுக்கும் கீழ்படியுங்கள். அவ்வாறேயானால், இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீங்கள் அமைதியை பெற்றுவிடுவீர்கள். இன்ஷா அல்லாஹ்!

“ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் சட்டப்படி செயல்படுகிறோம்,” “இந்நூற்றாண்டின் கலீ∴பத்துல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறோம்” என்பதால் இனி ஒருபோதும் பிரச்சினைகளுக்கும் துன்புறுதல்களுக்கும் சோதனைகளுக்கும் நாங்கள் ஆளாக மாட்டோம் என்று நீங்கள் எண்ண வேண்டாம். நிச்சயமாக நீங்கள் இக்கூறப்பட்ட் வழியாக கடந்து செல்வீர்கள். ஏனெனில் இது உங்களின் நம்பிக்கையின் மீதான சோதனையாகும். உங்கள் ஆற்றலை அல்லாஹ் சோதிப்பவனாக இருக்கிறான். அது மூலம் நன்மையை கொண்ட மக்களையும், தீமையைக் கொண்ட மக்களையும் அவன் வேறுபடுத்துகிறான். மனிதனை படைத்ததிலிருந்து இது அல்லாஹ் அமல்படுத்தி வரும் அவனது நடைமுறையாகும்.

எனது அன்பான தோழர்களே! அல்லாஹ்வின் அன்பான அடியார்களே! இஸ்லாமையும் உங்கள் நம்பிக்கையையும் சரி செய்யுங்கள். நேர்மையான முறையில் அல்லாஹ்வுக்கு உதவி புரிபவர்களாக இருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரியுங்கள். தேவையுடையவர்களாக இருக்கும் சகோதர சகோதரிகளை கைவிடாதீர்கள். எவர் ஒருவரின் இதயம் இரக்கத்தைக் கொண்டு

குவிந்திருக்கின்றதோ அவர்தான் முற்றிலும் அல்லாஹ்விடம் நெருக்கமாகயிருப்பவர். அல்லாஹ்வின் பொருட்டு அவர் பிறருக்கு உதவி கரங்களை நீட்டுபவராக இருப்பார்.

இவ்வுலகின் மகிமைகளை ஒரு போதும் நீங்கள் தேடாதீர்கள். இவ்வுலக மகிமை தற்காலிகமாகும். நித்தியமான வாழ்வின் மகிமைகளை நீங்கள் தேடுங்கள். அங்குதான் உங்கள் ஆத்துமா ஒரு நாள் நிலைத்திருக்கும். இன்ஷா அல்லாஹ்! நன்மையை செய்யுங்கள். நல்லதை சிந்தியுங்கள். எல்லா துறையிலும் நன்மையினை பாருங்கள். ஒரு நல்ல முஸ்லீம் என்ற நிலையில் அவரது உத்தமத் தன்மைக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காமல் மிக சிறந்த முறையில் உங்கள் சகோதர சகோதரிகளை சரி செய்ய முயற்சி செய்யுங்கள். எவர் ஒருவரும் முழுமை பெற்றவர்களல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் இதைப் பற்றி ஆராய்ந்தால் அல்லாஹ் நம்மை மன்னிப்பதை போன்று நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்று நமக்கு உணர்ந்து கொள்ளலாம். மன்னிப்பை பெற நாம் விரும்புகின்றவராக இருக்கிறோம். அதைப் போலவே மற்றவர்களை நாம் மன்னிக்க வேண்டும். உங்கள் இஸ்லாமிய சகோதர சகோதரிகளிடம் தாராள மனம் கொண்டவர்களாகயிருங்கள். அல்லாஹ்வின் வழியில் நீங்கள் பொருள் தியாகம் செய்வதால், முன்பு இருந்ததை விட மோசமானவராகவோ அல்லது ஏழைகளாகவோ மாறிவிடுவோம் என நீங்கள் எண்ணாதீர்கள். அவ்வாறு சிந்திக்காதீர்கள். அல்லாஹ்வின் அருள் மற்றும் அன்பினை நாடியவாறு பொருள் தியாகம் செய்பவருக்கு அல்லாஹ் அவருடைய பொருட்களை இரண்டு மடங்காகவோ, மூன்று மடங்காகவோ அல்லது அவர் கற்பனைக்கு அப்பாலான நிலையில் பொருட்களை அதிகரிக்க செய்வான். அல்லாஹ்வுக்காக செலவு செய்பவர்களின் செல்வம் ஒரு போதும் வீணாகுவதில்லை. அல்லாஹ் அத்தகையோருக்கு ஒதுக்கி வைத்துள்ள பொக்கிஷத்தை பற்றி அவன் மட்டும் அறிந்தவனாகயிருக்கின்றான். அது இவ்வுலகிலாகலாம் அதை விட மேலாக மறுவுலகிலாகலாம். இதை அவர்கள் உணர்ந்திருந்தால் தங்களது அனைத்து செல்வங்களையும் தியாகம் செய்திருப்பார்கள். ஆனால் எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்கு அல்லாஹ் உங்களை கேட்கவில்லை. அவர் தனது மார்க்கத்தை மேம்படுத்துவதற்கும் மானுட குலத்திற்கு இறைவனிடம் அதாவது ஏக இறைவனிடமான வழியினை காட்டுவதற்குமாக சிறுதளவில் செல்வங்களை தியாகம் செய்வதற்கு மட்டுமே அவன் கேட்கின்றான்.

ஆகவே எனது அன்பானவர்களே! இந்நூற்றாண்டின் இறை அருட்கொடையாகிய ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சான்றோர்களே! நீங்கள் மிக அதிஷ்டசாலிகளாக உள்ளீர்கள். அல்லாஹ்வின் வழியில் நீங்கள் மிக சிறந்த முறையில் செயலாற்றுங்கள். உங்கள் மத்தியில் கருத்து வேறுபாடு உருவாகி விட்டால் சாத்தானின் தந்திரங்கள் உங்கள் மத்தியில் வேரூன்றி விட்டது என்று நீங்கள் புரிந்துக் கொள்ளுங்கள். சாத்தான் சபிக்கப் பட்டவனாக இருக்கின்றான்.

ஆகவே அந்நொடியில் நீங்கள் அதற்கு தீர்வு காண வேண்டும். நம்பிக்கை கொண்ட சகோதரர்கள் அந்நொடியிலேயே ஒன்று சேர வேண்டும். அது வழியாக இஸ்லாமை வலுப்படுத்துங்கள். இதில்தான் இஸ்லாமின் எதிர்கால வெறியும் உங்களின் இரட்சிப்பும் குடிக் கொள்கிறது.

அவன் விவரித்திருக்கும் மக்களைப் போன்று நீங்கள் மாறி விடுங்கள். **“அவன் அவர்களை நேசிப்பான், அவர்களும் அவனை நேசிப்பார்கள். நம்பிக்கை கொண்டவர்களிடம் பணிவு காட்ட கூடியவர்களாகவும், நிராகரிப்பவர்களிடம் கடினமானவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் பெரும்முயற்சி செய்வார்கள். குறை கூறுவோரின் பழிப்பிற்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள்.”**

ஒவ்வொரு உள்ளங்களை அறிபவனும், உங்களை படைத்தவனுமாகிய இறைவனிடம் அன்பு மற்றும் அச்சத்தினை நிலை நிறுத்தியவாறு அவன் வழியில் செயல்படுவதற்கான தௌபீக் உங்கள் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் வழங்கிக் கொள்வானாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**
*Naib Amir Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala Contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu State, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**